# வகுப்பு - 10

## இயல் - 2

### உரைநடை உலகம்

### கேட்கிறதா என் குரல் !

**குறுவினா**

1. **“நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் – மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்**

**இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.**

❖ உணவு மனிதனுக்கு ஆதாரம்
மரம் மண்ணுக்கு ஆதாரம்
மரங்கள் மண்ணின் வரங்கள்

❖ மரம் வளர்ப்போம் ! மழை பெறுவோம்.

2. **தொல்காப்பியர் உலகம் எவற்றால் ஆனது என்கிறார்?**

தொல்காப்பியர், ‘உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது’ என்கிறார்.

3. **காற்று பற்றிய திருமூலரின் கூற்றை எழுதுக,**

திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப்பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.

4. **காற்று எப்பொழுது மழைப்பொழிவைத் தருகிறது?**

ஜீன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் மழைப்பொழிவைத் தருகிறது.


Created by Pinkz

## சிறுவினா

**1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான் முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ....முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப்பற்றிப் பேசினால் ...... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

**நானின்றி அமையாது உலகு.**

'நீர் இன்றி அமையாது உலகு' என்று திருவள்ளுவர் தெளிவாகப் பதிவு செய்துள்ளார், நீரே மனித வாழ்வின் அடித்தளம் பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழத்துணை புரிவது நீரே ஆகும்.

**பல்வேறு தோற்றங்களில் நான்.**

நீரைத்தண்ணீர் எனவும் கூறுவர். நீர், மழை நீர், ஆற்றுநீர், ஊற்றுநீர், குடிநீர் என பல பெயர்களால் நான் அழைக்கப்படுகின்றேன்.

**பல்லாற்றானும் பயன் தருபவன் நான்.**

நான் அருவி, ஆறு, ஏரி, கடல், உறைக்கிணறு, ஆழிக்கிணறு, கட்டுக்கிணறு, ஊற்று என பல நீர் நிலைகளாகிப் பயன்படுத்தப்படுகின்றேன்.

**பழம்பெரும் பனுவல்களில் நான்.**

திருக்குறளும் உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்கிறது. சங்கபாடலிலும் புறநானுற்றிலும் எனக்கே முதலிடம் தரப்படுகிறது.

**கலம் செலுத்தும் கடலாக நான்.**

தமிழர்கள் கடல் வணிகத்தின் மூலம் கடலை தம் ஆளுகையில் பல நூற்றாண்டுகளாக வைத்திருந்தனர். இவர்களின் வணிக பயணங்களில் நான் பலவாறு பயன் பட்டேன்.

**2. காற்றிற்கு வழங்கப்படும் பெயர்களை எழுதுக.**

- காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- பருவநிலை, சூழல், வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்ப அது அழைக்கப்படுகிறது.

❖ தென்றல்காற்று, பூங்காற்று, கடல்காற்று, பனிக்காற்று, வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்க்காற்று, மென்காற்று, இளந்தென்றல் புழுதிக்காற்று, ஆடிக்காற்று, கடுங்காற்று, புயல்காற்று, பேய்க்காற்று, சுழல்காற்று, சூறாவளிக்காற்று எனப்பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது.

***3. இலக்கியங்களில் காற்று எப்படி நீங்கா இடத்தைப் பிடித்திருக்கிறது?***

தென்றலாகிய காற்று, பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும்பொழுது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால் இளங்கோவடிகள் காற்றை

**" வண்டொடு புக்க மணவாய்த்தென்றல் '"என நயம்பட உரைக்கிறார்.**

பல பட்டடைச் சொக்கநாதப்புலவர் எழுதிய 'பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது' என்னும் சிற்றிலக்கியத்தில் பெண்ணொருத்தி.

**"நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர்பொருப்பிற்**

**செந்தமிழின் பின்னுதித்த தென்றலே"**

எனத் தூது செல்ல காற்றை அன்போடு அழைக்கிறாள், அதுமட்டுமல்ல

**'நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி**

**நடந்த இளந்தென்றலே'**

எனப் பலவாறாக இன்றளவும் இலக்கியப் படைப்புகளிலும், திரையிசைப் பாடல்களிலும் காற்று நீங்கா இடம் பிடித்திருக்கிறது.

## நெடுவினா

***1. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல***

**வளரும் விழி வண்ணமே – வந்து**

**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**

**விளைந்த கலை அன்னமே**

**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**

**நடந்த இளந் தென்றலே– வளர்**

**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**

**பொலிந்த தமிழ் மன்றமே**

- **கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.**

**தென்றல் காற்று :**

தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் காற்று எனப்படுகிறது. மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்புகொள்கிறது. இந்த மென்காற்றை இளந்தென்றல் என்பர்.

**இலக்கியத்தில் தென்றல் :**

தென்றல் காற்று பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும் பொழுது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால் இளங்கோவடிகள் **“வண்டொடு புக்க மணவாய்த்தென்றல்”** என நயம்பட உரைக்கிறார். பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் எழுதிய பல பட்டடைச் சொக்கநாதப்புலவர் எழுதிய ‘**பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது’** என்னும் சிற்றிலக்கியத்தில்.

“ **நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற்**
**செந்தமிழின் பின்னுதித்த தென்றல்** ”

எனத் தென்றலைப் பெண்ணொருத்தி அன்போடு அழைக்கிறாள்.

**கண்ணதாசனின் கவிதை நயம் :**

முழுவதும் மலராத மலர் மணத்தையும் அழகையும் கூட்டி வைத்திருக்கும் அம்மலரைப் போல வளரும் கண்ணின் வண்ணமே எனவும் விடிந்தும் விடியாத குளிர்ந்த காலை நேரத்தில் தோன்றிய கலை அன்னமே எனவும், நதியில் விளையாடி கொடிகளில் பாய்ந்து தலைசீவி தவழ்ந்து நடந்து வருகின்ற இளம் தென்றலே எனவும் பொதிகை மலையில் அகத்தியரால் வளர்க்கப்பட்டு மதுரை தமிழ்ச்சங்கங்களில் அழகாய் வளர்ந்த தமிழே எனவும் குழந்தையைக் கண்ணதாசன் பாடுகிறார்.


Created by Pinkz